**O.S.No.183/2014**

**Date:12.11.2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - கோபாலகிருஷ்ணன், த-பெ.ராமன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். (6ம் பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாவாச் சொத்தை என் தாயாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என் அம்மா பெயர் என்ன என்றால் ரா.மீனாட்சி ஆகும். என் அம்மா பெயர் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் மீனாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், இரண்டும் ஒன்றுதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்துடன் உள்ள என் அம்மாவின் வாக்காளர் அடையாள அட்டையிலும் மீனாள் என்றுதான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பத்திரத்தில் மீனாள் என்பதை அடித்து விட்டு மீனாட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியுள்ள கிரையப் பத்திரத்தில் தாவாச் சொத்து என் தாயாருக்கு பூர்வீகப் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கிரயம் வாங்கும் போது என் தாயாருக்கு தாவர்ச சொத்து பூர்வீகம் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் என் தாயாரிடமிருந்து வாங்கியுள்ளேனா என்றால் என் அம்மா பெயரில் இருந்த பட்டா புத்தகம் மற்றும் வரி ரசீதுகள் வாங்கியுள்ளேன். என் தாத்தா பெயர் என்ன என்றால் அய்யணன்கோனார், அவருக்கு மூன்று ஆண் மக்கள் மற்றும் நான்கு பெண்கள் ஆவார்கள். கருப்பையா, சின்னக்காளை, ஆறுமுகம் கருப்பாயி, என் தாயார் மீனாட்சி, ஏலம்மாள், கிருஷ்ணம்மாள் ஆகிய ஏழு பேர் வாரிசுகள் ஆவார்கள். என் உடன் பிறந்தவர்கள் மூன்று பேர் ஆவார்கள். ராஜு., முருகேசன், ஜெயா, வசந்தி ஆகியோர் ஆவார்கள். என் அம்மாவுக்கு பூர்வீகப் பாத்தியம் என்ற நிலையில், என் தாத்தாவிடமிருந்தோ அல்லது என் அம்மாவின் உடன்பிறந்தவர்களிடம் இருந்தோ ஆவணம் எதுவும் எழுதி வாங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் தாத்தா பெயரில் பட்டா இருந்ததா என்றால் தெரியாது. தாவாச் சொத்தை நான் கிரையம் பெற்ற பின்னர் பட்டா மாறுதலுக்கு மனுச் செய்தேனா என்றால் செய்தேன். மனு என்ன ஆனது என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனு நிலுவையில்தான் உள்ளது. தாவாச் சொத்து அரசாங்கத்தால் க.மீனாட்சி என்பவருக்கு ஒப்படை கொடுக்கப்பட்ட சொத்து என்றால் தெரியாது. எனக்கு படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் க.மீனாட்சி என்பவருக்கு நிபந்தனையுடன் கூடிய ஒப்படை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கிரைய ஆவணத்தை ரத்து செய்யக் கோரி மாவட்ட பதிவாளரிடம் மனு தாக்கல் செய்யப்படடுள்ளது என்றால் சரிதான். அதில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை ரத்து செய்து உத்தரவிடப்பட்டது. இந்த பத்திரம்

மோசடியாக தயார் செய்யப்பட்டதால் ரத்து செய்யப்பட்டது என்றால் அந்த உத்தரவை எதிர்த்து அசல் வழக்கு தாக்கல் செய்யப்படடுள்ளது. தாவாச் சொத்துக்கு நான்குமால் என்ன என்றால் வடக்கே என் அப்பா ராமன் பெயரிலான நிலம் உள்ளது, தெற்கே தற்போது பாண்டி இடம் உள்ளது. கிழக்கே பெருமாள் இடம் உள்ளது. மேற்கே மாணிக்கம் இடம் உள்ளது. தாவாச் சொத்து எனக்குப் பாத்தியப்பட்ட சொத்தோடு சேர்ந்த மாதிரி உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தை சுற்றி உள்ள இடம் முழுவதும் சுமார் 100 ஏக்கர் வரை அரசாங்கத்தால் சாரி செய்யப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. என்னிடம் சுமார் 30, 40 ஏக்கர் உள்ளது என்றால் சரியல்ல, தற்போது சுமார் பத்து ஏக்கர் இருக்கும். ஒப்படை சொத்துக்கள்தான் என் சொத்துக்களை சுற்றிலும் உள்ள சொத்துக்கள் என்றால் சரியல்ல, பூர்வீகச் சொத்துக்கள் ஆகும். அவை பூர்வீகச் சொத்துக்கள் கிடையாது என்றாலும், ஒப்படை செய்யப்பட்ட சொத்துக்களை அபகரித்து எங்கள் கைவசம் வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக மேலூர் வருவாய் நீதிமன்றத்தில் டி.ஆர்.எண்.4-2014 என்ற மனு விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கையின்படி ரூ.25000- பெறுமானமுள்ள மரத்தை வாதி வெட்டியதாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இதுவரை இந்த குற்ற விசாரணையில் மேற்படி மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் காவல் நிலைய விசாரணைக்கு சாட்சிகளை ஆஜர் செய்துள்ளேனா என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னர், காவல் துறையினர்தான் விசாரணை செய்ய வேண்டும். நான் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் என் செல்வாக்கின் காரணமாக இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டு, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இல்லை, அதற்குள் எதிரி வெளிநாடு சென்று விட்டார். வாதியானவர் அவர் விவசாயம் செய்வதற்காக முள்வேலியை சுத்தப்படுத்தியதை வைத்து நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் மீனாட்சி என்பவரின் கிரையப்பத்திரத்தின் பேரில் நான் மூல ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு எனக்கு அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதற்கு நான் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருந்தேன். நான் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றாலும், ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்கள் நீதிமன்றத்திலிருந்து மீனாட்சிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் என்றால் சரிதான். தாவாச் சொத்தை வாதியானவர் 60 வருடத்திற்கும் மேலாக உழவடை செய்து வருகிறார் என்றாலும், நான் அதை தெரிந்து கொண்டே, என் தாயார் ரா.மீனாள் என்பதை பயன்படுத்தி, க.மீனாட்சி என்ற பெயரில் மோசடியாக இந்த பத்திரத்தை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக வட்டாட்சியர், மாவட்ட ஆடசியர், வருவாய் கோட்டாட்சியர், இந்த பட்டாவை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்து, அந்த நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலமாக தபால் வந்தது என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நான் ஆஜரானேன் என்றால் சரிதான். அந்த விசாரணையின் முடிவு என்ன ஆனது

என்றால் நிலுவையில் உள்ளது. மொத்தமாக அந்த பகுதியில் உள்ள எந்த சொத்தும் எங்களுக்கு பூர்வீகச் சொத்து கிடையாது என்றாலும், அரசாங்கத்தால் பல்வேறு நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அவற்றை நாங்க்ள அபகரிக்க வேண்டும் என்பதற்காக சுமார் 30 ஏக்கரை மோசடி செய்து, எங்கள் செல்வாக்கின் காரணமாக கைப்பற்றி வைத்து, இந்த சொத்தையும் கைப்பற்றி வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை வில்லங்கம் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வாதியானவர் எந்த அடிப்படையில் வில்லங்கம் செய்ய முடியும் என்று தேவையில்லாமல் பரிகாரத்தை கோரியுள்ளேன் என்றாலும், எனக்கு பாத்தியமில்லை என்பதால்தா்ன அவ்வாறு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து அரசங்கத்திற்குப் பாத்தியப்பட்டுள்ளது என்றாலும், எனக்கு தாவாச் சொத்து மீது எனக்கு எந்த உரிமயும் கிடையாது என்றாலும், வாதியானவர் பாதுகாக்கப்பட்ட உழவடைதாரர் என்றாலும், அவரை வெளியேற்றுவதற்கு எனக்கு சட்ட ரீதியான எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றாலும், எனவே இந்த வழக்கை வழக்குப்படி தீர்ப்பு செய்ய வேண்டும் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.